1968 மார்ச் 2]

மதுரை மாவட்டத்தில் காலரா நோய்

*127 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-67-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் அம்மை, காலரா நோய்வாய்ப்பட்டவர் முறையே எத்தனை பேர், தாலூக்காவாரியாக ?

(இ) அதன் காரணமாக இறந்தோர் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ)

தாலூகாவின் பெயர்.	அம்மை.	காலரா.
மதுரை	..	299
திருமங்கலம்	..	46
பழனி	..	25
மேலூர்	..	1
திருப்பரங்குன்றம்	..	11
பெரியகுளம்	5	..

(இ)

தாலூகாவின் பெயர்.	அம்மை.	காலரா.
மதுரை	..	46
திருமங்கலம்	..	7
பழனி	..	10

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் காலரா நோயால் அதிகமான பேர்கள் இறந்து போனார்கள். போதுமான தடுப்பு முறை இல்லாத காரணத்தினால்தான் அதிகமான பேர்கள் இறந்து போனார்கள். தடுப்பு முறை போதுமான அளவுக்கு ஏன் கையாளப்படவில்லை ? மதுரைக்கு, அங்கே உற்சவம் நடப்பதால் அதிகமான பேர்கள் வருகிறார்கள். ஆகவே, மதுரை நகரத்தில் காலராவைத் தடுப்பதற்கு நிரந்தர ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருக்கிறதா ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : To control the incidence of cholera in Madurai District necessary public health staff has been posted wherever necessary and the population particularly at risk like slum dwellers have been covered with anticipatory anti-cholera inoculations as completely as possible. All other preventive measures were carried out intensively and the infection has been brought under control. 5,38,229 inoculations have been carried out in Madurai District and further work is in progress.

பூளவாடி மருத்துவமனை

*128 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், குடிமங்கலம் யூனியன் பூளவாடியிலுள்ள ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில் எப்பொழுது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.